சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னிலை- திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06-ம் நாள் வியாழக்கிழமை

வழக்கிடை மனு எண்.01/2025 in அசல் வழக்கு எண்.37/2023

1. சரவணன்
2. தேவன்
3. அங்கம்மாள்
4. பரிமளா ......மனுதாரர்கள்/ 2, 3 5, மற்றும் 6 பிரதிவாதிகள்

/எதிர்/

காஞ்சனா .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 09.10.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/ 2, 3 5, மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் S.P. கீர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G. நெடுஞ்செழியன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

## உத்தரவு

கடந்த 01.10.2024 ம் தேதி மேற்படி வழக்கில் பிரதிவாதிகளுக்கெதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மீண்டும் நடத்த உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென உ.வி.மு.ச. கட்டளை IX, விதி 7-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1 ஆம் மனுதாரர்/ 2 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்-**

மேற்படி இம்மனுவில் 1 ம் மனுதாரர் என்றும், தாவாவில் 2 ம் பிரதிவாதி என்றும் தாவாவில் 1ம் பிரதிவாதி இறந்த தனது தந்தை ஆறுமுகம் என்றும், 2 ம் மனுதாரர் தனது சகோதரர் என்றும், 3 ம் மனுதாரர் தனது தாயார் என்றும், 4 ம் மனுதாரர் தனது சகோதரி என்றும், இந்த மனுவை தனக்காகவும், இதர மனுதாரர்களுக்காகவும் சேர்த்து தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி அசல் வழக்கு செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அவ்வழக்கானது வரம்பெல்லை காரணமாக இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகி அழைப்பாணை தங்களுக்கு சார்வானது என்றும், தாங்கள் தங்கள் தரப்பில் வழக்கறிஞர் வைத்து ஆஜரானதாகவும், மேற்படி வழக்கில் தாவா திருத்தம் செய்யப்பட்டு திருத்தல் தாவா தாக்கல் செய்யப்பட்டதாகவும், 3, 4 மனுதாரர்களுக்கு எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா வழங்கப்பட்டதாகவும் கடந்த 01.10.2024 அன்று தாவா 2 முதல் 6 பிரதிவாகிளான தங்களை அழைத்து ஆஜரின்மையால் அன்றைய தினம் தங்கள் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி வழக்கை தானும் தனது சகோதரரும் நடத்தி வந்ததாகவும், தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நீதிமன்றத்தில்

ஆஜராகவில்லை என்றும், மேலும் தனது சகோதரரும் 2 ம் மனுதாரருமான தேவன் என்பவர் பிழைப்பிற்காக வெளியூர் சென்றதாகவும், இதர மனுதாரர்கள் தாங்கள் வழக்கை கவனித்து வருவதால் அன்றைய தினம் அவர்களும் ஆஜராகததால் தங்கள் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என தனது வழக்கறிஞர் அறிவுறுத்தியதால் தான் இம்மனுவுடன் தாங்கள் வழக்கறிஞர் மாறுதல் வக்காலத்தையும் 1, 2 மனுதாரர்களான தங்கள் சார்பில் கூடுதல் எதிர்வழக்குரையும் மற்றும் 5, 6 பிரதிவாதிகள் சார்பாக எதிர்வழக்குரையையும் சேர்த்து தாக்கல் செய்வதாகவும், எனவே மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டியது நியாயமும் அவசியமும் ஆகும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிர்உரையின் சுருக்கம்**:-

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அபிடவிட்டில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் பொய்யானவைகளும், மனு அபிடவிட்டில் கூறியுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவித மற்றவை எதிர்மனுதாரர்கள் வன்மையாக மறுப்பதாகவும், மனுதாரர்கள் தனது அசல் வழக்கு செய்யாறு சார்பு நீதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகி வழக்கில் தாவா திருத்தம் செய்யப்பட்டு திருத்த தாவா தாக்கல் செய்யப்பட்டதாகவும், 3, 4 மனுதாரர்களுக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா வழங்கப்பட்டதாகவும், 01.10.2024 அன்று தாவா 2 முதல் 6 வரையுள்ள பிரதிவாதிகளை அழைத்து ஆஜராகாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், குறிப்பிட்டுள்ள சங்கதிகள்

மட்டும் உண்மை என்றும், மனுதாரரும் அவரது சகோதரரும் வழக்கை நடத்தி வந்தார்கள் என்றும், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத சூழ்நிலையில் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும், 2ம் மனுதாரர் பிழைப்பிற்காக வெளியூர் சென்றுவிட்டதாகவும், இதர மனுதாரர்கள் 1, 2 மனுதாரர்கள் வழக்கை கவனித்து வருவதால் அன்றைய தினம் அவர்களும் ஆஜராககாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்ற சங்கதி தவறானது என்றும், குறிப்பிட்டுள்ளார்.

3.2) மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திருத்த தாவா 27.03.2024 ல் தாக்கல் செய்யப்பட்டதாகவும், அதனடிப்படையில் 2, 3, 4 பிரதிவாதிகள் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யவும், 5, 6 பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்யவும், 29.04.2024, 13.06.2024, 27.06.2024, 24.07.2024, 14.08.2024, 12.09.2024 மற்றும் 01.10.2024 ஆகிய தேதிகளில் வாய்தா அளிக்கப்பட்டும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பதிலுரையோ, கூடுதல் பதிலுரையோ தாக்கல் செய்யாததால் தான் 01.10.2024 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் எக்ஸ்பார்ட்டி எவிடென்ஸ்க்காக 23.10.2024, 16.11.2024, 21.11.2024, 06.12.2024, 19.12.2024, 22.01.2025, 01.02.2025, 26.02.2025 மற்றும் 19.03.2025 ஆகிய தேதிகளில் வாய்தா போடப்பட்டதாகவும், மனுதாரர்கள் 01.10.2024 ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய ஏற்கனவே 3ம் மனுதாரர் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், அந்த மனுவில் மனுதாரரும், இம்மனுவின் 1ம் மனுதாரரான சரவணன் என்பவரும் சேர்ந்து தாக்கல் செய்ததாகவும், அதில் மேற்படி இருவரும்

01.10.2024 அன்று தங்கள் உறவினர் நிகழ்ச்சிக்காக சென்னைக்கு சென்றுவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். எனவே இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4. இங்கு தீர்மானிக்க வேண்டிய அம்சம் யாதெனில்:-**

***மனுதாரருக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யப்படவேண்டுமா? என்பதே ஆகும்.***

i) இருதரப்பிலும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் எதுவும் இல்லை. மனுதாரர் தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் மனுதாரர்களின் நெருங்கிய உறவினர் இறந்துவிட்ட காரணத்தினால் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டது என்றும், தற்போது இம்மனுவுடன் எதிர் வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர்கள் மீண்டும் வழக்கு நடவடிக்கையில் பங்கு கொள்வதற்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டுமென்றும் வாதிட்டார். மாறாக எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் மனுவில் சொல்லியுள்ள காரணங்களுக்கு ஆதாரம் இல்லை என்றும், இவ்வழக்கில் வெற்றிபெறக்கூடிய வாய்ப்பு இல்லாத காரணத்தினால், காலம் கடத்தும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் வாதிட்டார்.

ii) வழக்கு ஆவணங்களை உற்றுநோக்கும் போது வழக்கின் வாதி, பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர தடையுத்தரவு கோரி வழக்கு தொடர்ந்து, வழக்கு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்கு போடப்பட்டிருந்த நிலையில், பிரதிவாதிகள்

இந்நீதிமன்றத்தில் ஆஜராக தவறியதால் கடந்த 01.10.2024 அன்று அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யாமல் போனால் பிரதிவாதிகளால் வழக்கு விசாரணையில் பங்கு கொள்ளமுடியாது. இது போன்ற வழக்குகளில், இது போன்ற தருணங்களில் பிரதிவாதிகளுக்கு வழக்கில் பங்கு கொள்ள வாய்ப்பளிக்க வேண்டுமென்று மாண்பமை உயர் நீதிமன்றத்தின் பல முன்னோடி தீர்ப்புகள் உள்ளது. இருதரப்பையும் விசாரணை செய்து வழங்கும் தீர்ப்பு முழுமையானதாக இருக்கும் என்பதால் இந்த மனுதாரர்கள் வழக்கில் பங்குகொள்ள மேலும் ஒரு வாய்ப்பளிக்க இந்நீதிமன்றம் கருதுவதாலும், இந்த மனுவை அனுமதிக்கலாம் என்றும், அதேசமயம் இந்த மனுதாரர்களால் காலதாமதம் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு அந்த காலதாமதத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகை வழங்கும்பட்சத்தில் மனுவை அனுமதிக்கலாம் என்றும் தீர்மானித்து இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

<u>முடிவில்:-</u>

மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ வருகின்ற 13.11.2025 -ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும், தவறும்பட்சத்தில் தள்ளுபடியானதாகக் கருதப்படும். மீண்டும் இந்த மனு 14.11.2025 அன்று அழைக்கப்படும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.11.06 15:12:43 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் -இல்லை

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.11.06 15:12:49 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.